# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092381

1. District / மாவட்டம் : VELLORE    PS / காவல்நிலையம் : VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE    Year / ஆண்டு : 2019    FIR No. / மு.த.அ. எண் : 8/2019    Date / நாள் : 20.03.2019.

2. (i) Act சட்டம்: 7 of P.C (Amendment) Act 2018.    Sections பிரிவுகள்: 102 Crpc r/w 7 of P.C (Amendment) Act 2018.

   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் Prior to 1.11.2018    Date to : நாள் வரை 01.11.2018.

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் Prior to 14.00 hrs    Time to : நேரம் வரை —

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 1.11.2018    Time நேரம் : 12.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-II 2018    Time நேரம் : 12.00 hrs and 22.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    நேரடி தேசனை

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் East - 6 kms

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —    District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Jothy    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sampath.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965.    (d) Nationality : நாட்டினம் INDIAN    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer, District Inspection cell office, Vellore.    (g) Address : முகவரி District Inspection cell office, Vellore and Tiruvannamalai District, Collectorate campus, Sathuvachari, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. Tr. K.S. Murali Prasad @ Vinayagam, Asst General Manager (Diary) i/c General Manager, VTDCMPU Ltd, Vellore.
   2. Tr. P. Sekar S/o Purushothaman, Executive (Engg) Diary (Milk) cum Powder Plant, Ammapalayam, Chengam Tk, T.V. Malai Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   For getting permission u/s 17A of P.C (Amendment) Act 2018.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

... (attach separate sheet if necessary)

... விவரம் மேலுமேயானில் தனிக் தாளில் இணைக்கவும்)

Seperate sheet Enclosed

... as mentioned at item No.2 registered the case ... to take up the Investigation / Refused ... on point of jurisdiction.

... பிரிவுப்படியான குற்றமாக வழக்கு ... பதவி ...................... நிலை ... / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ...

... correctly recorded and a copy given to the Complainant / ...

... எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் ...

20.03.2019
15.30 hrs.

20.03.19

Signature of the Officer in-charge, Police Station

காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name பெயர் S. VIJAY,

Rank நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

இன்று 20.03.2019-ம் தேதி வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக காவல் ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரகம் சென்னை அலுவலகத்தில் இருந்து நமுனா எண்.No.Rc. /2019/AH/VL (SC No.39708/2018/AH/VL) Dated:15-03-2019 வரப்பெற்றதை பார்வை செய்ய கடந்த 01.11.2018 அன்று மதியம் 14.00 மணி முதல் 22.00 மணி வரை வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிமிடெட்டில் இரு துறை திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்கில் வராத, தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் யாரும் உரிமை கோராத தொகை ரூ.14,85,000/- கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொளவது குறித்த முன் அனுமதி Ref.No.22761/Pers.IR.2/2018 Dated:25.02.2019 Managing Director, The Tamilnadu Co-operative Milk Producers' Federation Limited, Chennai இணைக்கப்பட்டிருந்தது. மேற்சொன்ன முன் அனுமதியை பார்வை செய்து உத்தரவுப்படி கடந்த 02.11.2018 அன்று சம்பவம் தொடர்பாக திரு.S.ஜோதி அவர்களின் புகாரின் அடிப்படையில் 1) திரு.K.S.முரளி பிரசாத், த/பெ.வினாயகம், உதவி பொது மேலாளர் (பால்வளம்) கூடுதல் பொறுப்பு பொது மேலாளர் மற்றும் 2) திரு.P.சேகர், த/பெ.புருஷோத்தமன், செயலர் (பொறியியல்), பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, அம்மாபாளையம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர் மீது பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கை பின்வருமாறு: அனுப்புநர் S. ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இரு துறை திடீர் கூட்டு தணிக்கை - வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிமிடெட் - 01.11.2018 மதியம் 14.00 மணி முதல் 22.00 மணி வரை தணிக்கை மேற்கொள்ளப்பட்டு - கணக்கில் வராத, தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் யாரும் உரிமை கோராத தொகை ரூ.14,85,000/- கைப்பற்றப்பட்டது - நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு அளித்தல் சம்மந்தமாக. நான் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட

ஆய்வுக்குழு அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலராக பணி செய்து வருகிறேன். நேற்று 01.11.2018 ஆம் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தபோது வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒருங்கினைந்த நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் இயங்கி வரும் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் (ஆவின்) பொது மேலாளர் (பொறுப்பு) திரு. K. S. முரளி பிரசாத், என்பவரின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் (ஆவின்)-ல் பணிபுரியும் டெக்னீசியன், ஆபரேட்டர், மின் பணியாளர்களாக பணிபுரிந்து வரும் 11 பணியாளர்களுக்கு கடந்த 1986-ம் ஆண்டிலிருந்து அவர்களது அடிப்படை ஊதியத்தின் ஆண்டு ஊதிய உயர்வு நிலுவைத்தொகையை அரசிடமிருந்து பெற்றுத்தர பலமுறை கோரிக்கைகள் வைத்ததின் பேரில், 01.06.1986-ம்தேதி முதல் கருத்தியலாகவும், கடந்த 01.04.2013-ம்தேதி முதல் பணப்பயன் வழங்க உத்திரவுகள் பெறப்பட்டு, அதன்படி கடந்த 29.10.2018-ம்தேதியன்று பணப்பயன் வழங்குவது சம்மந்தமாக அலுவலக நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு, காசோலை கனரா வங்கிக்கு அனுப்பப்பட்டு 11 நபர்களுக்கும் உண்டான தொகை அவரவர் வங்கி கணக்கில் முதல் தவணையாக வரவு வைக்கப்பட்டவுடன், அவரவர் பெற்ற நிலுவைத்தொகைக்கு ஏற்ப 35% லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் அதை கொடுக்கப்படும் முதல் தவணையில் பாதி தொகையும் இரண்டாம் தவணையில் 35 சதவீதத்தில் முதல் தவணையில் பாதி கொடுத்தது போக மீதமும், லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று பொது மேலாளர் (பொறுப்பு) திரு. முரளி பிரசாத் அவர்கள் பதினொரு ஊழியர்களில் ஒருவரான திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுக்காவில் உள்ள அம்மாபாளையம் கிராமத்தில் உள்ள ஆவின் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையில் செயலர் (பொறியியல்) ஆக பணிபுரியும் திரு. P. சேகர் அவர்கள் மேற்படி லஞ்சப்பணத்தை அனைவரிடமும் லஞ்சமாக கட்டாய பண வசூல் செய்து கொடுக்கும்படி சொன்னதின் பேரில், திரு. P. சேகர் அவர்கள், பிற பத்து ஊழியர்களை கட்டாயப்படுத்தி லஞ்சமாக பணம் வசூல் செய்வதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. மேற்படி தகவலை தகவலர்கள் மூலம் உறுதி செய்துகொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பாதுகாப்புடன், இணைந்து, 01.11.2018-ம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு மேற்படி

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., (ஆவின்) அலுவலகத்தில், இருதுறை திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிமிடெட் அலுவலகத்திற்கு சென்றபோது, TN 23 BF 2603 என்ற பதிவு எண் கொண்ட Silver நிற Toyota Innova கார் ஒன்று புறப்பட தயாராக இருந்தது. அந்த வாகனத்தின் அருகில் சென்று வாகனத்தில் இருந்தவர்களிடம் எங்களை சுய அறிமுகம் செய்துகொண்டு, எங்களிடம் பணமோ வேறு பொருட்களோ இல்லை என்பதை தெரிவித்துக்கொண்டு, அதில் இருந்த ஓட்டுனரை விசாரிக்க, அவர் தனது பெயர் R. சுரேஷ் எனவும், மற்றொரு நபரை விசாரிக்க, அவர் தான் ஆவின் உதவி பொது மேலாளர், கூடுதல் பொறுப்பாக பொது மேலாளர் பணி செய்து வரும் முரளி பிரசாத் என்றும் கூறினார். ஓட்டுனர் சுரேஷை காரை நிறுத்த சொல்லி, அவர்கள் இருவரையும் இறங்க சொல்லி எங்களுடன் வந்து அவருடைய அறையை காண்பிக்க சொல்ல, அவர்களிருவரும் வருவதாக சொல்லி எங்களுடன் வந்தனர். அப்போது அலுவலகத்திற்குள் நுழைய முயன்ற மற்றொரு நபரை நிறுத்தி விசாரிக்க, அவர் தனது பெயர் P. சேகர் என்றும், தான் திருவண்ணாமலை மாவட்ட செங்கம் தாலுக்காவில் உள்ள அம்மாபாளையம் ஆவின் பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையில் செயலர் (பொறியியல்) ஆக பணிபுரிந்துவருவதாகவும், தான் உதவி பொது மேலாளர், பொது மேலாளர் (பொறுப்பு) (ஆவின்) அவர்களை பார்க்க வந்துள்ளதாக சொன்னதால், அவரையும் மேலே எங்களுடன் வரும்படி சொல்லி அழைத்து வந்து, என்னையும் மற்றும் காவல் ஆய்வாளர் அவர்களையும், உதவி பொது மேலாளர், கூடுதல் பொறுப்பு: பொது மேலாளர், ஆவின் வேலூர் மற்றும் அங்கிருந்த பிற அலுவலர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு, மீண்டும் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்திக்கொண்ட பின், திரு. முரளி பிரசாத், உதவி பொது மேலாளர், கூடுதல் பொறுப்பு: பொது மேலாளர் என்பவரது அறையில் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்பாக திரு. முரளி பிரசாத் அவர்களை சோதனையிட, அவருடைய பேண்ட்டின் வலது புற பாக்கெட்டில் பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.12,660/- இருந்தது. அந்த பணம் குறித்து உதவி பொது மேலாளரிடம் கேட்க, அவர் அந்த பணம் தனது குடும்ப உறுப்பினர்கள் ஏற்கனவே வாடகைக்கு அமர்த்தி, பயன்படுத்திய காருக்கான வாடகை தொகையை கொடுப்பதற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அப்பணம் அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் வாகனத்தின்

ஓட்டுனர் திரு. சுரேஷ் என்பவரை சோதனை செய்ய, அவரிடமும் எவ்விதமான பணமோ, வழக்கு சம்மந்தமான ஆவணங்களோ இல்லை. மேற்படி பொது மேலாளர் அறையில் வழக்கிற்கு சம்மந்தமான எவ்வித பணமோ, ஆவணமோ இல்லை. பின்னர் மேற்படி திரு.P. சேகர் அவர்களை சோதனை செய்ய, அவருடைய வலது பேண்ட் பாக்கெட்டில் கட்டாக பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க அதில், ரு.2,85,000/- இருந்தது. அந்த பணத்தை பற்றி திரு. P. சேகர் அவர்களிடம் விசாரிக்க, அதற்கு அவர் தான் பொறுப்பு பொது மேலாளராக பதவி வகிக்கும் திரு. முரளி பிரசாத் அவர்கள் உத்திரவுப்படி, தனக்கும், தன்னுடன் சேர்த்து 10 பணியாளர்களுக்கும் அரசிடம் இருந்து கிடைக்க வேண்டிய மொத்த சம்பள நிலுவைத்தொகையில் 35% லஞ்சப்பணத்தை கமிஷனாக வாங்கித்தர வேண்டும் என்றும், அது இரண்டு தவணைத்தொகைகளாக வரும்போது, அதில் முதல் தவணையில் பாதித்தொகையையும், இரண்டாவது தவணையில் 35% பாதிபோக மீதம் உள்ள தொகையையும் வசூல் செய்து தருமாறு சொல்லியிருந்ததால், தான் நேற்று 31.10.2018-ம் தேதியன்று திரு. ஜீவா என்பவரிடம் ரு.1,70,000/-ம், திரு. வெங்கடேசன் என்பவரிடம் ரு.2,00,000/-யையும், பின்பு அன்று மாலை, சத்துவாச்சாரி கனரா பேங்க் அருகில், திரு. பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து ரு.2,25,000/-ம், திரு. சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து ரு.2,00,000/-ம், பின்னர் வேலூர் புதிய பஸ் ஸ்டாண்டு அருகில் திரு. முத்துராமன் என்பவரிடமிருந்து ரு.1,70,000/-ம், பின்னர் இரவு சுமார் 0730 மணியளவில், பாகாயம் பஸ் ஸ்டாப் அருகில் திரு. மாணிக்கம் என்பவரிடமிருந்து ரு.1,70,000/-ம், திரு. குமார் என்பவரிடமிருந்து ரு.2,00,000/-ம் ஆக மொத்தம் ரு.13,35,000/-ம் லஞ்ச பணத்தை திரு.முரளி பிரசாத் அவர்களின் உத்தரவுபடி வசூல் செய்து தன்னுடைய வீட்டிற்கு எடுத்து சென்று வைத்திருந்துவிட்டு, 01.11.2018-ம்தேதி மேற்படி தொகையை கையில் எடுத்துக்கொண்டு, சத்துவாச்சாரி ஆவின் பொது மேலாளர் அலுவலகத்திற்கு வந்து திரு. முரளி பிரசாத் அவர்களை சந்தித்து, அவரிடம் ரு.11,00,000/-ஐ கொடுத்துவிட்டு, மீதப்பணம் ரு.2,35,000/- தான் வைத்திருந்ததாகவும், பின்னர் தன்னுடைய வங்கி கணக்கில் வரப்பெற்றிருந்த நிலுவைத்தொகையில் இருந்து ரு.2,00,000/-ஐ எடுத்து, அதனை குடும்ப செலவிற்காக கொடுத்துவிட்டதாகவும், அதன் பின்னர் திரு. M. சேகர், டெக்னீசியன் (ஆபரேட்டர்) என்பவரிடமிருந்து ரு.50,000/-ஐ லஞ்சபணமாக பெற்றும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, ஆவின் அலுவலகத்திற்கு வந்தபோது அங்கிருந்த திரு. செல்வராஜ் என்பவர்

ரூ.1,00,000/-ஐ வாங்கி திரு.முரளி பிரசாத் என்பவரிடம் மொத்தம் ரூ.3,25,000/-மாக கொடுக்கலாம் என ஆவின் அலுவலகத்திற்கு வர அங்கு செல்வராஜை பார்க்க முடியவில்லை என்றும், அந்த நேரத்தில் பொது மேலாளர் திரு. முரளி பிரசாத் அவர்கள் அவரது காரில் வெளியில் செல்ல தயாராகயிருப்பதாக தகவல் கிடைத்ததால், அந்த நேரம் வரை வசூல் செய்யப்பட்ட ரூ.2,85,000/-ஐ பொது மேலாளரிடம் கொடுக்க வந்ததாக சொன்னார். அவரை விசாரணை செய்து, சோதனை செய்து அவர் வைத்திருந்த ரூ.2,85,000/- மற்றும் மேற்படி பதினொரு நபர்களின் பெயர்களும், அவர்களின் பதவி, அவர்களின் எம்ப்ளாயின்மெண்ட் நெம்பர், ஒவ்வொருவருக்கான மொத்த தொகை மற்றும் முதல் தவணை என ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்ததில், திரு. P.சேகர் லஞ்சப்பணம் வசூல் செய்ததை எழுதி வைத்திருந்த தாளும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. பின்னர் பொது மேலாளர் அறைக்கு வெளியே இருந்த துணை பொது மேலாளர் அறை மற்றும் துணை பொது மேலாளர் அறைக்கு அருகில் வடக்கு நோக்கிய வாயிலை கொண்டுள்ள அறையும் சோதனை செய்யப்பட்டது பணமோ அல்லது வழக்கு தொடர்புடைய பொருளோ கைப்பறப்படவில்லை. மேலும் நிர்வாக பிரிவு அறையில் இருந்த திரு. R.பிரசாத், துணை மேலாளர், தொழில் உறவு பிரிவு (Industrial Relation Section) என்பவரை சோதனை செய்ய, அவர் வசம் ரூ.2,255/- இருந்தது. அது குறித்து கேட்க, அவர் தனது சொந்த செலவிற்காகவும், மருந்து வாங்க வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு. J. ஜெயராஜ், முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ரூ.40/- இருந்தது. அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையை சோதனை செய்ய அந்த அறையில் பணமோ, வழக்கு சம்மந்தமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் நிர்வாக பிரிவு அறைக்கு பக்கத்தில் ப்ராஜக்ட் அறையை பார்க்க அந்த அறையில் பழைய ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையை சோதனை செய்ய, அங்கு வழக்கு சம்மந்தமான ஆவணங்களோ, பணமோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் திரு.முரளி பிரசாத் அவர்களிடம், திடீர் சோதனைக்கு வந்தபோது, அவர் புறப்பட தயாராக இருந்த அரசு வாகனத்தை பற்றி கேட்க, அவர் ஆவின் சேர்மனுக்கு கொடுக்கப்பட்ட அரசு வாகனமான TN 23 BF 2603 என்ற பதிவு எண் கொண்ட Toyota Innova காரினை தான் பயன்படுத்தி வருவதாக சொன்னதால், அந்த காரினை சோதனையிட்டபோது, அந்த காரின் ஓட்டுனர் இருக்கைக்கு இடது புறத்தில் உள்ள

இருக்கையின் சீட் கவரின் பௌச்சினை சோதனையிட, அதில் திருமணத்தாம்பூல மஞ்சள் நிற பையில் சிறிய சிறிய கட்டுகளாக பணம் ரூ.200 நோட்டுகள் 10 பண்டல்களாக இருந்தது. அதை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் மொத்தம் ரூ.2,00,000/- இருந்தது. மேலும், மேற்படி காரின் ஓட்டுனர் இருக்கைக்கு பின்புறம் உள்ள மூன்று பேர்கள் அமரும் இருக்கையில், பக்கவாட்டில் காக்கி நிறத்துடனும், மற்ற பகுதிகள் மெரூன் நிறத்துடனும் இருந்த Harshaa Jewellery, New No.114/3, Old No.422, Main Bazaar, VELLORE – 632 004 என அச்சிடப்பட்டிருந்த ஜிப் வைத்த கைப்பையை பார்க்க, அதில் ரூ.500 நோட்டுகள் சிறிய சிறிய கட்டுகளாக, பண்டல்களாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 18 பண்டல்களும் அதை எண்ணிப்பாக்க மொத்தம் ரூ.9,00,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, பொது மேலாளர் திரு. முரளி பிரசாத்திடம் கேட்க, அந்த தொகை எப்படி தன்னுடைய காரினுள் வந்தது என்று தனக்கு தெரியாது என்று சொன்னார், மேலும் அவரால் அதற்கு தக்க முகாந்திரம் சொல்ல இயலவில்லை. மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் திரு. சுரேஷ் என்பவரிடம் அந்த பணத்தை பற்றி விசாரிக்க, அவர் தனக்கும் அந்த பணத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னதாலும், மேற்படி ரூ.11,00,000/-ஐ பொது மேலாளரும், ஓட்டுனரும் உரிமை கோராததாலும், தக்க முகாந்திரம் கூறாததால் அந்த தொகை வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி இனோவா காருக்கு அடுத்து உள்ள பிரதான வாயிலுக்கு அருகில் உள்ள செக்யூரிட்டி அறையின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 23 BL 9281 Bolero வாகனத்தை அதன் ஓட்டுனர் திரு. விஜயன் உதவியுடன் சோதனை செய்ய, அந்த வாகனத்தில் வழக்கு சம்மந்தமான பணமோ, ஆவணமோ ஏதும் இல்லை. பின்னர் ஆவின் நிர்வாக பிரிவு கட்டிடத்தின் முன் பகுதியை சோதனை செய்ய, அங்கிருந்த புல்தரையில், செடிகளுக்கு இடையில் ஒரு வெள்ளை நிற பிளாஸ்டிக் கவர் இருந்தது. அதை திறந்து பார்க்க அதில் ரூ.200 நோட்டுகள் கட்டு கட்டுகளாக இருந்தது. அதை எண்ணிப் பார்க்க, ரூ.1,00,000/- இருந்தது. யாரும் உரிமை கோராத, கேட்பாரற்று கிடந்த அந்த பணம் ரூ.1,00,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், இந்த திடீர் சோதனையில், வழக்கிற்கு சம்மந்தமாக வேலூர் மற்றும் திருவண்ணாமலை பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் (ஆவின்) பொது மேலாளர் திரு. முரளி பிரசாத் அவர்களிடம் 11 ஊழியர்களுக்கும் சம்பள நிலுவைத்தொகை வழங்கியது சம்மந்தமான கோப்பு குறித்து கேட்க, அவர் திரு. S. குமரன், இளநிலை செயலர்

(அலுவலகம்), கணக்கு பிரிவு மற்றும் திரு. P. பழனி, துணை மேலாளர் (விற்பனை), வேலூர் மற்றும் திருவண்ணாமலை பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் (ஆவின்), சத்துவாச்சாரி, வேலூர் ஆகியோர்கள் மூலம் அந்த கோப்பினை தனித்தனி தாள்களாக Tag-ல் கோர்க்கப்பட்டு கோப்பாக இருந்ததை ஆஜர் செய்தார்கள். அந்த கோப்பில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், இளநிலை செயலர் திரு. குமரன் மற்றும் துணை மேலாளர் (விற்பனை) திரு. பழனி மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பிறகு காசோலை வழங்கும் பதிவேடு பற்றி கேட்க, திரு. குமரன், இளநிலை செயலர், அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், இளநிலை செயலர் திரு. குமரன் மற்றும் துணை மேலாளர் (விற்பனை) திரு. பழனி மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதனை அடுத்து காசோலை ஒப்புகை பதிவேடு பற்றி கேட்க, திரு. குமரன், இளநிலை செயலர், அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் வழக்கு சம்மந்தமான பதிவுகள் பக்கம்-35-ல் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த பதிவேட்டில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், இளநிலை செயலர் திரு. குமரன் மற்றும் துணை மேலாளர் (விற்பனை) திரு. பழனி மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டை பற்றி கேட்க, திரு. குமரன், இளநிலை செயலர், அந்த பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், துணை மேலாளர் (விற்பனை) திரு. பழனி மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் TN 23 BF 2603 என்ற பதிவு எண் கொண்ட Toyota Innova காரின் Log Book-யை ஆஜர் செய்யுமாறு கேட்க, பொது மேலாளர் மேற்படி Log Book-ஐ, மேற்படி காரின் ஓட்டுனர் திரு. சுரேஷ் அவர்கள் மூலம் ஆஜர் செய்தார். அதில் 21.09.2018 நாள் வரையிலுக்கான பதிவுகள் செய்யப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், ஓட்டுனர் திரு. சுரேஷ் மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதில் மேற்கொண்டு 01.11.2018- தேதி வரைக்கான பதிவுகள் செய்யாதது குறித்து ஓட்டுனரிடம் கேட்க, அவர் தன்னுடைய

நாட்குறிப்பில் அது சம்மந்தமான பதிவுகள் செய்து வைத்திருப்பதாகவும், அதன் அடிப்படையில், வரும் நாட்களில்தான் Log Book-ல் பதிவுகள் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்து, அவர் வைத்திருந்த 2018- வருடத்திற்கான நாட்குறிப்பை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 01.11.2018-ம்தேதி வரை பதிவுகள் செய்யப்பட்டிருந்தது. அதில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், ஓட்டுனர் திரு. சுரேஷ் மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதனை அடுத்து TN 23 BL 9281 என்ற பதிவு எண் கொண்ட Bolero ஜீப்பின் Log Book-யை ஆஜர் செய்யுமாறு கேட்க, பொது மேலாளர் மேற்படி ஆவணத்தை, மேற்படி காரின் ஓட்டுனர் திரு.விஜயன் அவர்கள் மூலம் ஆஜர் செய்தார். அதில் 30.09.2018 நாள் வரையிலுக்கான பதிவுகள் செய்யப்பட்டிருந்தது. அந்த ஆவணத்தில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், ஓட்டுனர் திரு.விஜயன் மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதில் மேற்கொண்டு 01.11.2018- தேதி வரைக்கான பதிவுகள் செய்யாதது குறித்து ஓட்டுனரிடம் கேட்க, அவர் தன்னுடைய நாட்குறிப்பில் அது சம்மந்தமான பதிவுகள் செய்து வைத்திருப்பதாகவும், அதன் அடிப்படையில், வரும் நாட்களில்தான் Log Book-ல் பதிவுகள் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்து, அவர் வைத்திருந்த 2018- வருடத்திற்கான நாட்குறிப்பை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 31.10.2018-ம்தேதி வரை பதிவுகள் செய்யப்பட்டிருந்தது. அதில் நான், காவல் ஆய்வாளர், பொது மேலாளர் திரு. முரளி பிரசாத், ஓட்டுனர் திரு. விஜயன் மற்றும் திரு. P. சேகர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இரு துறை திடீர் கூட்டு தணிக்கையில் வழக்கு சொத்தான கையூட்டு பணம் ரூ.14,85,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டு, வழக்கு சம்மந்தமான ஆவணம், கோப்பு மற்றும் பதிவேடுகள் கைப்பற்றப்பட்டு இந்த திடீர் சோதனை இரவு 2200 மணிக்கு முடிக்கப்பட்டது. இருதுறை திடீர் தணிக்கை தொடர்பாக முழுமையான விவரங்கள் அடங்கிய செயல்முறை 01.11.2018 ஆம் தேதி மதியம் 14.00 மணி முதல் 22.00 மணி வரை தயார் செய்யப்பட்டு அதன் நகல் திரு.முரளி பிரசாத் உதவி பொது மேலாளர் (பால்வளம்), கூடுதல் பொறுப்பு பொது மேலாளர் அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு தணிக்கையில் பணம் ரூ.14,85,000/- கைப்பற்றப்பட்டது. திரு.K.S.முரளி பிரசாத், த/பெ.விநாயகம், உதவி பொது மேலாளர்

(பால்வளம்) கூடுதல் பொறுப்பு பொது மேலாளர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய லிமிடெட் தனது பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து தன் கீழ் பணியாற்றும் பணியாளர்களை கட்டாயப்படுத்தி அவர்கள் பெற்ற ஊதிய நிலுவைத் தொகையில் இருந்து லஞ்சமாக பணத்தை மேற்படி 10 ஊழியர்களிடமிருந்து திரு.P.சேகர், த/பெ.புருஷோத்தமன், செயலர் (பொறியியல்), பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, அம்மாபாளையம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் மூலம் கட்டாய வசூல் செய்து லஞ்சமாக பெற்றுக்கொண்ட 1) திரு.K.S.முரளி பிரசாத், த/பெ.வினாயகம், உதவி பொது மேலாளர் (பால்வளம்) கூடுதல் பொறுப்பு பொது மேலாளர் மற்றும் 2) P.சேகர், த/பெ.புருஷோத்தமன், செயலர் (பொறியியல்), பால் மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை, அம்மாபாளையம், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.14,85,000/-ஐ வேலூர் மாவட்ட கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது அதற்கான அத்தாட்சியின் சான்றொப்பமிட்ட நகல் மற்றும் இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். இப்படிக்கு Sd.xxxxx (S.ஜோதி) 02/11/2018 துணை ஆய்வு குழு அலுவலர், வேலூர் & தி.மலை மாவட்டம்.

Sir,

Copy of the complaint, dated:02/11/18 sent to DVAC, Chennai for getting permission from the competent authority as per Section 17A of P.C. (Amendment) Act 2018. Sd/-xxxxxxxx (S.VIJAY), 02.11.18

Sir,

Today (20.03.2019) after obtaiing a permission from the Managing Director, TNCMPF Ltd., Chennai-35 a case in Vellore V&A.C. Cr.No.08/2019 U/S. 102 Cr.PC., r/w 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 registered on 20.03.2019 @ 15.00 Hrs. Sd/-xxxxxxxx (S.VIJAY), 20/3/19.

பதிவு செய்யப்பட்ட அசல் முதல் தகவல் அறிக்கை, புகார், செயல்முறை மற்றும் பெறப்பட்ட முன் அனுமதி ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், அனுப்பிக்கொண்டேன்.

20/3/19

C.S. VIJAY 20/3/19
DSP/V&AC/VLR.